மக்களுடைய சங்கடங்களைத் தெரிவித்தார்கள், இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், இன்றைக்கு இருக்கிற நிலைமையில் திருவட்டாரில், நான் முதலிலே சொன்னபடி, 1200 பத்திரங்கள்தான் பதிவாகின்றன. அதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்றால்கூட, 1200 அல்லது 1400 இப்படியிருந்தால் இரண்டாகப் பிரிக்க முடியாது. அப்படி இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்றால், இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கின்ற 584 சார்பதிவாளர் அலுவலகங்களில், பல இடங்களில் 2200, 2300, 2600, 3000 என்று இருக்கிறது. எல்லாவற்றையும் பிரிக்க வேண்டுமென்றால் இன்றைக்கு எத்தனை சார்பதிவாளர் அலுவலகங்கள் இருக்கின்றனவோ அதைப்போல் இரண்டு மடங்கு பிரிக்க வேண்டிய நிலைமை ஏற்படும். அப்படி இன்றைக்கு இருக்கிற நிலைமையில் அதைப் பிரிப்பதற்கு இயலாது என்றும், வேண்டுமென்றால் மக்களுடைய நலன் கருதி எதிர்காலத்தில் அதைப்பற்றி அரசு ஆய்வு செய்யும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 103. டாக்டர் அ. ஸ்ரீதரன்; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

103--

அனைத்து அரசு மருத்துவமனையிலும் உயிர்காக்கும் மருந்து தட்டுப்பாட்டினை நீக்குதல்

*** 20057 டாக்டர் அ. ஸ்ரீதரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

EFCORLIN (HYDRO CORTISONE HEMI SUCCINATE) என்ற உயிர்காக்கும் மருந்து அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் போதிய அளவு தட்டுப்பாடின்றி கிடைக்கச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹைடிரோகார்டிசோன் ஊசி மருந்து மருத்துவமனைகளில் கிடைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்திலுள்ள எந்த நோய்க்கும் ஹைடிரோகார்டிசோன் ஹெமிசக்கினேட் என்று சொல்லக்கூடிய உயிர் காக்கும் மருந்து, ஒரு சின்ன மருத்துவமனையிலிருந்து, கிளினிக் முதற்கொண்டு, பெரிய மருத்துவமனை வரையிலும், இந்த மருந்து இருந்தாக வேண்டும். இது

1993 டிசம்பர் 31]

அரசு மருத்துவமனையானாலும், தனியார் மருத்துவமனையானாலும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட உயிர்காக்கும் மருந்து நம் மருத்துவமனைகளில், குறிப்பாக அரசு மருத்துவமனைகளில் ஒரு நாள் இல்லாமல் இருந்தால்கூட, ஏராளமான நோயாளிகள் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்படுகின்ற காரணத்தினால், அரசு மருத்துவமனைகளில் எப்பொழுதும், 365 நாட்களும் இந்த மருந்து இருக்கும் என்ற நிலையை ஏற்படுத்த நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில காலங்களுக்கு முன்பு, மருந்துகள், சிலநேரங்களில் பற்றாக்குறை இப்படி பிரச்சினை இருந்தது உண்டு. ஆனால் கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக அந்தப் பிரச்சினைகள் முழுமையாகத் தீர்க்கப்பட்டிருக்கின்றன. தேவையான மருந்துகள், உயிர்காக்கும் மருந்துகள் எல்லா மருத்துவமனைகளிலும் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி எந்த ஒரு கம்ப்ளையின்டும் இந்தச் சூழ்நிலையில் இல்லை. இருந்தாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை அரசு ஏற்று உரிய அளவிலே இந்த மருந்துகள் அனைத்து மருத்துவமனைகளிலும் இருப்பதற்கான நடவடிக்கை தீவிரமாக எடுப்பதற்கு ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அரசு மருத்துவமனையினுடைய செயல்பாட்டை சீருடனும், சிறப்புடனும் நடத்தி வருகிறார்கள். நான் இந்தக் கேள்வியைக் கேட்டதற்குக் காரணமே மருத்துவர்கள் கன்சூமர் கோர்ட்டிற்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற காரணத்தினால், அரசு மருத்துவமனையிலும் சரி, மற்ற மருத்துவமனையிலும் சரி இந்த மருந்து போதிய அளவிற்கு எப்பொழுதும் இருக்க வேண்டும். கண்காணிக்கின்ற பொருட்டு ஒவ்வொரு நாளுடைய ஸ்டாக் பொசிஷன் இந்த மருந்தைப் பொறுத்தவரை, ஒவ்வொரு மருந்துகளையும் பொறுத்தவரை, ஸ்டாக் பொசிஷனை நம்முடைய அமைச்சர் அவர்களுக்கும், சம்பந்தப்பட்ட மருத்துவ அதிகாரிகளுக்கும் அவ்வப்போது தெரிவிப்பதற்கான ஒரு வாய்ப்பை அமைச்சர் உருவாக்கித் தருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறை அதிகாரிகளிடத்திலே சொல்லி இந்த மருந்துகள் கண்டிப்பாகக் கிடைக்கின்றவகையிலே அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தலை மீண்டும் ஒரு முறை அவர்களுக்கு

சர்குலராக அனுப்பலாம். ஏற்கெனவே அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு முறையும் மாவட்ட அதிகாரிகளுடைய கூட்டத்தைக் கூட்டுகிறபோது, இதைப்பற்றி நாங்கள் அவர்களுக்குத் தெளிவாகச் சொல்லுகிறோம். எப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டாலும் மருந்துகள் இல்லையென்ற ஒரு நிலை வந்துவிடக்கூடாது என்பதை நாங்கள் அவர்களுக்குத் தெளிவாக வலியுறுத்தியிருக்கிறோம். சில நேரங்களிலே சில மருந்துகள் கிடைக்காத காரணத்தினால் பிரச்சினைகள் ஏற்பட்டுவிடுகின்றன. எனவே, அதைத் தவிர கிடைக்கின்ற அத்தனை மருந்துகளையும் வாங்கி வைக்கத் தேவையான நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். சமீபத்திலே அது போன்ற பிரச்சினை இல்லை. பிரச்சினைகள் வராமல் பார்த்துக்கொள்ள இந்த அரசாங்கம் ஒழுங்கான நடவடிக்கை எடுக்கும்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, அரசு மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சைப் பிரிவில் அறுவை சிகிச்சைக்குத் தேவையான மருந்துகள், கருவிகள் இல்லையென்ற காரணத்தினால், அங்கு சிகிச்சை பெற்று வருகின்ற இருதய சிகிச்சை நோயாளிகளிடம் சுமார் 10 ஆயிரம் ரூபாய் அளவிற்கு மருந்துகள், கருவிகள் வெளி மார்க்கெட்டிலே வாங்கிக்கொண்டு வரவேண்டுமென்று அங்கு இருக்கின்ற டாக்டர்கள் வற்புறுத்துகிறார்கள். இதன் காரணமாக அறுவை சிகிச்சை நோயாளிகள், உள்நோயாளிகளான அவர்கள் டிஸ்சார்ச் செய்யப்பட்டு புறநோயாளிகளாக சிகிச்சை பெற்று வரக்கூடிய ஒரு அவல நிலை ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, அரசு உடனடியாக இருதய அறுவை சிகிச்சைக்குத் தேவையான மருந்துகள், கருவிகளை உடனடியாக வாங்கிக் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.15

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட மருந்தைப் பற்றி கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இது ஒரு பொதுவான கேள்வி என்பதால் பதில் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக அரசு மருத்துவ மனைகளிலே போய் இலவசமாக சிகிச்சைப் பெற்றுக்கொள்வதற்கு யார் யாருக்குத் தகுதி இருக்கிறதோ அந்தத் தகுதி படைத்தவர்களுக்கு உரிய மருந்துகளைத் தேவையான அளவுக்கு அளித்து சிகிச்சை அளிப்பதில் கருத்து வேறுபாடு இல்லை. அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வலியுறுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்

1993 டிசம்பர் 31]

அவர்கள் சொன்னதைப் போன்ற பிரச்சனைகள் இருப்பதாக எனக்குத் தகவல் வரவில்லை. இருந்தாலும் அந்த மருத்துவமனையில் விசாரித்து, அந்தச் சூழ்நிலை இருந்தால் அதை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் தகுதி படைத்தவர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் இலவசமாக சிகிச்சை அளிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். மாறுபட்ட சூழ்நிலை இருந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, EFCORLIN (HYDRO CORTISONE HEMI SUCCINATE) என்ற மருந்து உயிர்காக்கும் மருந்தாகும். அதற்கு சில சமயங்களில் தனியார் மருந்துக் கம்பெனிகளை நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இதுபோன்ற உயிர்காக்கும் மருந்துகளை அரசினுடைய மருந்துக் கம்பெனிகளில் தயாரிப்பதற்கு அல்லது அரசு புதிதாக ஒரு தொழிற்பேட்டை அல்லது மருந்துக் கம்பெனியை ஆரம்பித்து, இந்த மருந்தைத் தயாரித்து மருத்துவ மனைகளுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஏறத்தாழ 1200 மருந்துகள் வாங்கப்படுகின்றன. அதற்கான பட்டியல் இருக்கிறது. அவை எல்லாவற்றையுமே நாம் தயாரிக்க ஆரம்பித்தால் அது ஒரு தொழிலாகப் போய்விடும். ஆகவே, இதில் முயற்சி எடுப்பதைவிட கிடைக்கிற மருந்துகளை வாங்கிக் கொடுத்து, பொதுமக்களுக்கு வசதி செய்வது சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறோம். தனியாக மருந்துக் கம்பெனிகளை அரசாங்கமே ஆரம்பிப்பது என்பது ஒரு கடுமையான சூழ்நிலை என்றும் கருதுகிறோம்.

திரு. ஆ.கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி"

என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க, இந்த நான்கு தனித் தன்மைகளைப் படைத்திருக்கிற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மக்கள் நலன் கருதி, தளர்ந்த குடிகளைக் காத்தல் என்ற முறையில், தமிழ் நாட்டின் ஜோதியாகவும் மன்னர்களுக்கெல்லாம் மன்னராகவும் விளங்கும் டாக்டர் புரட்சித் தலைவியின் நல்லாட்சியில் நாங்கள் மதிப்பீட்டுக் குழுவின் சார்பில் கிராமப்புறங்களில் இருக்கிற 'பிரைமரி ஹெல்த் சென்டர்ஸ்', 'அடிஷனல் ஹெல்த் சென்டர்ஸ்' ஆகியவைகளுக்கு விஜயம் செய்தோம். 'மெட்டர்னிட்டி சென்டர்'களையும் அணுகிப்பார்த்தோம். அங்கே சிகிச்சை பெறும் நோயாளிகளையும்,

பணியாற்றும் நர்சுகளையும் கேட்டபோது குழந்தைபேறு காலங்களில் திடீரென்று மின்சாரம் தட்டுப்பாட்டின் காரணமாக நின்றுவிடுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சீனிவாசன், உங்களுடைய திக்விஜயம் பூராவும் இங்கே வரவேண்டாம். இந்தக் குறிப்பிட்ட உயிர் காக்கும் மருந்து இருக்கிறதா என்பதைப் பற்றியது கேள்வி. மின்சாரம் இருக்கிறதா இல்லையா என்பது போன்ற கேள்வி இதிலே வரக்கூடாது.

திரு. ஆ.கு. சீனிவாசன்: மின்சாரம் இல்லாத காரணத்தினால் இருட்டடிப்பில் குழந்தைகளை டெலிவரி செய்யும்போது அரைகுறையாக, உடல் ஊனமுற்ற முறையில் பெறவேண்டிய நிலைமை இருக்கிறது. இந்தக் குறையைப் போக்குவதற்காக, சீக்கிரத்தில் வெளிச்சம் அளிப்பதற்காக ஜெனரேட்டர் வசதி இருந்தால் குழந்தைகளைப் பேணிக் காக்க வசதியாக, நலமாக இருக்கும் என்று சொன்னார்கள். ஆகையால் தமிழ்நாடு முழுவதும், மக்கள் நலன் கருதி, தளர்ந்த குடிகளைக் காக்க வேண்டுமென்று முறையில், பிரைமரி ஹெல்த் சென்டர்களிலும், அடிஷனல் ஹெல்த் சென்டர்களிலும், மெட்டர்னிட்டி சென்டர்களிலும் ஜெனரேட்டர் வசதி செய்துகொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.20

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இவ்வளவு சிரமப்பட்டு சொன்னதினாலே அதை ஆய்வு செய்வது நியாயம் என்றே தோன்றுகிறது. இருந்தாலும் ஏற்கனவே எங்கெங்கே அறுவை அரங்கங்கள் இருக்கின்றனவோ அங்கே எல்லாம் ஜெனரேட்டர் கொடுத்துக் கொண்டே வந்திருக்கிறோம். ஆனால் சப்-சென்டரிலேயும், பிரைமரி ஹெல்த் சென்டரிலேயும் 'நார்மல் டெலிவரி' மட்டும்தான் பார்க்கப்படுகிறது. 'காம்ப்ளிகேட்டட் டெலிவரிஸ்' எல்லாம் பக்கத்தில் இருக்கிற பெரிய மருத்துவமனைக்கு அனுப்பிவிடுகிறார்கள். எனவே அந்தச் சங்கடம் அங்கே இருக்க வாய்ப்பில்லை. மேலும் மின்சாரத் தட்டுப்பாடு என்பது ஏதோ ஒரு நேரத்தில், அதாவது ஒரு மாதத்தில் இரண்டு நாட்களுக்கோ, மூன்று நாட்களுக்கோ ஒரு அரை மணிநேரம் என்ற அளவில், இப்படித்தான் ஏற்படுகிறதே தவிர வேறுவிதமாக அல்ல. எனவே அந்த நேரத்திலே வேறு மாற்று வழிகளைப் பயன்படுத்தி அவர்கள் செய்துகொள்கிறார்கள். ஏறத்தாழ 1400 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. 8000 துணை சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. இவைகள் அத்துணைக்கும் நாம் ஜெனரேட்டர்கள் கொடுப்பது என்பது முடியாத காரியம். அது

1993 டிசம்பர் 31]

அவ்வளவு பெரிய அளவில் அவசியம் இல்லை. எங்கெங்கே ஜெனரேட்டர்கள் தேவைப்படுகிறதோ அதையெல்லாம் செய்துகொண்டு இருக்கிறோம். எனவே தேவையான அளவுக்கு அந்த நடவடிக்கையை நாம் மேற்கொள்ளலாம். எனவே இருட்டடிப்பில் அப்படிப்பட்ட நிலைமை ஏற்படாது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னது இருட்டடிப்பில் குழந்தைகள் பெறும்போது குழந்தைகள் ஊனமுற்று விடுகின்றன என்று சொன்னார்களேயொழிய அப்படி அல்ல. அப்படிப்பட்ட சூழ்நிலை இல்லை. அப்படி எல்லாம் இருந்திருந்தால் நான் பிறக்கிற நேரத்திலே எங்கள் ஊரிலே கரன்ட் கிடையாது. அவர் சொல்வதுபோல் என்றால் நாங்கள் எல்லாம் ஊனமாகத்தான் பிறந்திருப்போம். அப்படி அல்ல சூழ்நிலை. ஆனால் மின்சாரத் தேவை என்பது அவசியம். அது இல்லாத நேரத்தில் மற்ற வழிகளை அவர்கள் செய்துகொள்கிறார்கள். இதைப் பார்த்து யாரும் பயந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் இந்தக் கருத்தை நான் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கமாகச் சொன்னதற்குக் காரணம் இந்த வசதிகளை எல்லாம் எப்படியாவது ஏற்படுத்திவிட வேண்டும் என்ற ஆர்வத்தில்தான் அவ்வாறு கூறினார்கள் என்று எடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்து அதற்கான நடவடிக்கை எடுக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 104. திரு. கே. தவசி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

104--

ஆண்டிப்பட்டி அரசு மருத்துவமனையில் போதியளவு மருத்துவர்களையும் ஊழியர்களையும் நியமித்தல்.

21194-

திரு.கே. தவசி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஆண்டிப்பட்டி அரசு மருத்துவமனைக்கு போதிய அளவு மருத்துவர்களையும் ஊழியர்களையும் நியமித்து முழுமையான அரசு மருத்துவமனையாகச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,